ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2378/12 – 2024 අප්‍රේල් මස 01 වැනි සඳුදා – 2024.04.01
2378/12 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு**

நீர் வழங்குநர்களுக்கான நீர் இணைப்பு பற்றிய வழிகாட்டல்கள்

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகிய நான், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர் வழங்குநர்களுக்கான நீர் இணைப்பு வழிகாட்டல்களை" இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

**ஜீவன் தொண்டமான்,**
நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்
அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பிலக்கம் : DEV/04/ADB/GEN/01.
நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு,
"லக்திய மெதுர"
35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த,
பத்தரமுல்லை.
2024, மாச்சு 27.

1A – G41691 – 24 (2024/04)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## *நீர் வழங்குநர்களுக்கான நீர் இணைப்பு வழிகாட்டல்கள்*

### *அறிமுகம்*

*1.1 பின்னணி*

*நாட்டில் பல்வேறுபட்ட நீர் வழங்கல் சேவைகளை வழங்கிவரும் நீர் வழங்குநர்கள் (WS) சட்டங்கள் மற்றும் அதிகாரங்களின் கீழ் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளைகள்/ அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். பல்வேறுபட்ட நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் பவுசர் வண்டிகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக நீரை விநியோகம் செய்யும் தனியார் துறை நீர் விற்பனையாளர்கள் தவிர்ந்த இணைக்கப்பட்ட குழாய்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நீரை வழங்கும் பிரதான நீர் வழங்குநர்களாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB), உள்ளூராட்சி மன்றங்கள் (LA) சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBO கருத்திட்டங்கள்) என்பன காணப்படுகின்றன.*

*தற்போது, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் (NWSDB) நிர்வகிக்கும் நீர் வழங்கல் திட்டங்களின் மூலம் சுமார் 48% மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகின்றது. அவ்வாறே, சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBO) ஊடாக மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் (LA) மூலம் மேலும் 12% மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகின்றது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB) கிட்டத்தட்ட 3.0 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு தனது சேவைகளை வழங்குகின்றது. அதில் 2 மில்லியன் பேர் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் ஆவர். நீர் மூலங்களின் திறன் மற்றும் வரையறைகள், நீர் வழங்கல் திட்டங்களின் சுத்திகரிப்பு வசதிகள் மற்றும் குறைந்த அழுத்தம் காரணமாக புதிய பகுதிகளுக்கு சேவையை விரிவாக்கம் செய்து வழங்க முடியாதுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB) நேரடி வலையமைப்புக்களுடன் இணைக்கப்பட்டிருந்த போதிலும் சில வாடிக்கையாளர்கள் தங்கள் வளாகத்திற்கு தொடர்ச்சியான நீர் விநியோகத்தைப் பெறுவதில்லை. அத்தோடு சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர்கள் பகலில் சில மணிநேரங்களுக்கு மாத்திரமே நீரைப் பெறுகின்றனர் என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். பெரும்பாலான சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBO) மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் (LA) மூலம் நிர்வகிக்கப்படும் திட்டங்களும் குறைந்த அளவிலான நீர் வழங்கல் திறன்களையே கொண்டுள்ளன.*

*தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக புதிய திட்டங்கள் அல்லது வசதிகளை மேம்படுத்துவதற்கான மூலதனச் செலவை இலங்கை அரசாங்கத்தினால் (GOSL) ஏற்க முடியாதுள்ளது. எனவே, அதிகரித்த சனத்தொகை காரணமாக எதிர்கால வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய அதிகளவான பிரதேசங்களுக்கு நீரை வழங்குவது என்பது கடினமான விடயமாக மாறிவிட்டது. எனவே, நீர் மானியை பொருத்துவதற்கு முன்னும் பொருத்திய பின்னும் நீர் விரயமாவதைக் குறைத்து நீர் இருப்பை அதிகரிப்பதன் மூலம் அதிகளவான மக்களுக்கு நீரை வழங்குவதற்குத் தேவையான முகாமைத்துவ அணுகுமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.*

*எனினும், பெரும்பாலான வீடுகள் மற்றும் நிறுவனங்கள் இந்த விடயத்தில் கவனம் எடுக்கவில்லை அல்லது தீவிரமாக பரிசீலிக்கவில்லை என்பது*

*அவதானிக்கப்படுகின்றது. ஏனெனில் கடந்தகால கட்டண அமைப்பு முறைகள் வீடுகள் மற்றும் நிறுவனங்களுக்குள் நீர் விரயத்தைக் குறைப்பதற்கு அல்லது சிறந்த தரமான நீர் பொருத்துதல்களுக்கு பணத்தை செலவு செய்வதற்கு ஊக்கப்படுத்தவில்லை என்றே கூற முடியும். அத்தோடு வீடுகள் மற்றும் நிறுவனங்களில் காணப்படும் இந்த நீர் விரயத்துக்கான மற்றுமொரு கவலைக்குரிய விடயம் யாதெனில், குழாய் அமைப்புக்களை பொருத்தும் போதும் அவற்றின் பராமரிப்பு /பழுதுபார்ப்புகளின் போதும் தரமான உள்ளீடுகள் பயன்படுத்தாமையாகும்.*

*எனவே, அனைத்து நீர் வழங்கல் சேவைகளை வழங்கும் வழங்குநர்களும் பின்பற்றி ஒழுக வேண்டிய விரிவான மற்றும் பொதுவான நீர் இணைப்பு வழிகாட்டலின் பிரகாரம் நீர் விரயத்தை குறைப்பதற்கும் சேவை வழங்குவதில் சமனிலையை உறுதி செய்வதற்கும் நீர் இணைப்பு வழிகாட்டலை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.*

*1.2* நோக்கம்

நீர் இணைப்பு வழிகாட்டல் நீர் சேவை வழங்கும் வழங்குநர்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாகும். நம்பகமான மற்றும் நிலையான சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இணைக்கப்பட்ட குழாய்கள் மூலம் நீரை விநியோகிப்பவர்கள் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

வாடிக்கையாளரின் வளாகத்திற்கு நீர் இணைப்பு மற்றும் நீர் சேவை வசதிகளை வழங்குவது தொடர்பான நீர் வழங்குநர்களின் தொழில்நுட்ப, நடைமுறை மற்றும் வர்த்தக ரீதியான தேவைப்பாடுகள் என்பவற்றை நீர் இணைப்பு வழிகாட்டல் உள்ளடக்கியுள்ளது. இந்த நீர் இணைப்பு வழிகாட்டல்கள், செலவு குறைந்த இணைப்புகள், புதிய நீர் வழங்கல் அமைப்புகள், விரிவாக்கங்கள் மற்றும் நீர் வழங்கல் சேவைகளை வழங்கும் வழங்குநர்களின் உட்கட்டமைப்பு விரிவாக்கம் என்பவற்றை ஊக்குவிக்கும் வகையில் நன்கு திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

நீர் வளங்களின் பேண்தகு முகாமைத்துவத்திற்கு பொறுப்புக் கூறுவதற்கும் சமமான அணுகலை ஊக்குவிப்பதற்கும் பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் சமூகங்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் நீர் இணைப்பு வழிகாட்டல்கள் அவசியமாகும்.

*1.3* உள்ளடக்கம்

நீர் இணைப்பு வழிகாட்டல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

அ. புதிய இணைப்புகள், இணைப்புகளை மேம்படுத்தல் மற்றும் அதிக நீர் தேவையுடைய எந்தவொரு நபர் அல்லது நிறுவனமும் நீர் வங்குநர்களின் உட்கட்மைப்பு தொடர்பில் உரிமைகளைக் கொண்டுள்ளனர்.

ஆ. ஆரம்ப மதிப்பீடு தேவைப்படும் நீர் வழங்கல் இணைப்புக்கான புதிய நடைமுறை பற்றிய விளக்கம்.

இ. நீர் குழாய் பொருத்தல் மற்றும் உபகரணங்களை நிறுவும் போது சொத்துக்களின் அமைப்பு மற்றும் கட்டுமானத்திற்கான விவரக்குறிப்புகள் போன்ற தொழில்நுட்ப தேவைப்பாடுகள்.

ஈ. நீர் குழாய் பொருத்தும் பணிகளுக்கு அனுமதி வழங்குவதற்கான செயல்முறை, வேலையின் தொழில்நுட்ப இணக்கத்தை பரிசோதித்தல், இணைப்பை வழங்குதல், நீர் வழங்குநர்களால் பரிசோதித்தல். அந்தச் சொத்துக்களை எதிர்காலத்தில் அணுகுவதை உறுதி செய்தல் மற்றும் நீர் விரயத்தைக் குறைப்பதற்கு விழிப்புணர்வை பரப்புதல் போன்ற நடைமுறைத் தேவைகள் மற்றும்

உ. வர்த்தக ரீதியான தேவைப்பாடுகள், இணைப்புக்கான புதிய பயன்பாடுகளின் தாக்கம், ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்கள் மற்றும்/அல்லது நீர் வழங்குநர்களுக்கு அதிக செலவுகளைச் சுமத்தாமல் இருப்பதை உறுதிசெய்தல்.

*1.4* குறிக்கோள்கள்

நீர் இணைப்பு வழிகாட்டல்களின் நோக்கம் யாதெனில், நீர் வழங்குநர்களின் உட்கட்டமைப்பு அல்லது சேவைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் அதிகரித்த நீர் தேவைக்கு ஏற்ப மதிப்பீடுகளை செய்தல் மற்றும் புதிய இணைப்புகள் மற்றும் இணைப்புகளின் மேம்படுத்தல்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை எளிதாக்குதல் என்பனவாகும்.

நீர் வழங்குநர்களின் தொழில்நுட்ப, நடைமுறை மற்றும் வர்த்தக ரீதியான ஆவணங்கள் பின்வரும் நோக்கங்களை கருத்திற்கொண்டு தயாரிக்கப்படும்:

அ. நீர் இணைப்பு வசதி கிடைக்கக்கூடிய பகுதிக்குள் சமமான அணுகலை உறுதி செய்தல்.
ஆ. வெளிப்படையான நீர் இணைப்பு செயன்முறையை அமுல்படுத்தல்.

இ. நீர் வழங்குநர்களின் உட்கட்டமைப்பு மூலோபாய பயன்பாட்டை மேம்படுத்தல்.

ஈ. நீர் வழங்குநர்களின் வாடிக்கையாளர் சேவை நிலைகளைத் தடுக்கவோ அல்லது இணக்கம் செய்யவோ கூடாது.

உ. நீர் வழங்குநர்களின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்புத் தேவைகளைத் தடுக்கவோ அல்லது இணக்கம் செய்யவோ கூடாது.

ஊ. முறையான உட்கட்டமைப்பு திட்டமிடல் மற்றும் முகாமையை உறுதி செய்தல்.

எ. நிலைபேர்த்தன்மை மற்றும் தரப்படுத்தலை உறுதி செய்தல்.

ஏ. புதிய நீர் தேவை காரணமாக சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல் மற்றும் வளப் பாதுகாப்பை அதிகரித்தல்.

ஐ. தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் மூலம் நீர் விரயத்தை குறைத்தல்.

ஒ. வளாகத்திற்குள் நீரின் தரத்தை உறுதிப்படுத்தல்.

ஓ. வாடிக்கையாளர்களுடனான உறவுகளை உறுதிப்படுத்தல்.

ஔ. வாடிக்கையாளர் மனக்குறைகள் மற்றும் முறைப்பாடுகளை ஏற்றல்.

க. விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல்.

ச. நீண்ட கால நிலைபேர்தன்மைக்கு பங்களிப்புச் செய்தல்.

ட. அவசரகால சூழ்நிலைகளுக்கான தயார்நிலையை உறுதிப்படுத்தல்

த. வாடிக்கையாளர் மற்றும் பிற சிவில் சமூகக் கண்ணோட்டத்தில் ஏற்படும் அபாயங்களைக் குறைத்தல்.

ப. புதிய குடிநீர் இணைப்புகள் ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களை பாதிக்காமல் இருத்தல்.

ற. வாடிக்கையாளர் திருப்தியை உறுதிப்படுத்தல்.

ய. நீர் பாதுகாப்பு பொறிமுறைகளை ஊக்குவித்தல்.

## 2. நோக்கம் மற்றும் பொதுக் கோட்பாடுகள்

### 2.1 நோக்கம்

நீர் வழங்குநர்கள், இப்போதும் எதிர்காலத்திலும் நம்பகமான நவீன பயன்பாட்டுப் பெறுமதியை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளனர். ஆயினும், நீர் வழங்கல் திட்டங்களின் திறன்கள் வரையறுக்கப்பட்டிருப்பதன் காரணமாகவும் அதிக மக்கள் தொகை காரணமாகவும் கூடுதலான பிரதேசங்களில் எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு நீரை வழங்குவது கடினமான விடயமாக மாறிவிட்டது. எனவே, நீர் மானியைப் பொருத்துவதற்கு முன்னும் பொருத்திய பின்னும் நீர் விரயமாவதைக் குறைத்து கேள்வி முகாமைத்துவ அணுகுமுறைகளைப் பயன்படுத்தி அதிக நீர் இருப்பை தக்கவைத்து அதிகமான மக்களுக்குத் நீரை வழங்குதல் வேண்டும். நீர் இணைப்பு வழிகாட்டல்களின் பயன்பாட்டின் மூலம் இலங்கை அரசாங்கத்தின் (GOSL) நோக்கமாக இருப்பது யாதெனில், அனைத்து பிரஜைகளுக்கும் சுத்தமான குடிநீரை வழங்குவதும் கூடுதல் பிரதேசங்களுக்கு நீர் வழங்கலை விரிவாக்கம் செய்வதுமாகும். நீர் வழங்குநர்களால் அறிவிக்கப்பட்ட நீர் வழங்கல் சேவை பகுதிகளுக்கு மாத்திரமே இந்த நீர் இணைப்பு வழிகாட்டல்கள் ஏற்புடையது. இந்த நீர் வழங்கல் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் நீர் இணைப்பு வழிகாட்டல்களுக்கு இணங்குதல் வேண்டும். நீர் இணைப்பு வழிகாட்டல்களுக்கு இணங்க நீர் இணைப்புகளுக்கு விண்ணப்பிக்கும் போது போதுமான தர உத்தரவாத செயல்முறைகளைப் பின்பற்றுவது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். நீர் இணைப்பு வழிகாட்டல்களில் இருந்து விலக்களிப்பு பெறுவதற்கு அது தேசிய தரநிலை தேவைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். அவ்வாறான விலக்களிப்புக்கள் மாத்திரமே நீர் வழங்குநர்களால் கவனத்திற்கொள்ளப்படும். நீர் வழங்குநர்கள், மேற்பார்வை மற்றும்/அல்லது ஒழுங்குமுறை நிறுவனத்தின் அனுமதியுடன் எந்த நேரத்திலும் தற்போதுள்ள தொழில்நுட்ப, நடைமுறை மற்றும் கட்டண அறவீட்டு ஆவணங்களைத் திருத்த முடியும்.

### 2.2 பொதுவான கோட்பாடுகள்

இணக்கமான நீர் இணைப்பை வழங்குவதற்கு பின்வரும் கொள்கைகள் ஏற்புடையன :

1. நீர் வழங்குநர்கள் தங்களது தொழில்நுட்ப, நடைமுறை மற்றும் வணிகத் தேவைகளை நியாயமான, சமமான மற்றும் நிலையான முறையில் பயன்படுத்துவர்.

2. நீர் வழங்குநர்கள் உரிமையை மாற்றும் போது அல்லது விநியோக அமைப்பில் மாற்றம் முன்மொழியப்படும் போது தற்போதைய தரநிலைகளுக்கு ஏற்ப நீர் இணைப்புகள் மேம்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்க முடியும். நிர்வாக ஆவணங்கள் பெயரளவு கட்டணத்தில் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். வாடிக்கையாளர் மற்றும் நீர் வழங்குநருக்கான நன்மைகளை கருத்தில் கொண்டு மேம்படுத்தல்கள் செய்யப்படல் வேண்டும்.

3. தொழில்நுட்ப நடைமுறை அல்லது வணிக ஆவணங்களில் சேர்க்கப்படாத ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு விசேட நிபந்தனைகளை நீர் வழங்குநர்கள் பயன்படுத்த முடியும். நீர் வழங்குநர்கள் வாடிக்கையாளர்களை முடிந்தவரை முன்கூட்டியே அது தொடர்பில் அறிவூட்டல் வேண்டும். (விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரம் இது ஏற்புடையது)

## 3. உரிமைகள் மற்றும் கடமைகள்

### 3.1 விண்ணப்பதாரரின் உரிமைகள் மற்றும் கடமைகள்

ஒரு விண்ணப்பதாரர் தனது வளாகத்தின் அல்லது அபிவிருத்தி நடவடிக்கையின் பொருட்டு புதிய நீர் இணைப்புக்கு விண்ணப்பிப்பதற்கும் ஏற்கனவே உள்ள இணைப்பை மேம்படுத்திக்கொள்வதற்கும் விண்ணப்பிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையையும் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒரு விண்ணப்பதாரர் உள்ளூராட்சி மன்றத்தின் (LA) வரி மதிப்பீட்டு இலக்கம், சொத்து உரிமையாளரின் அனுமதி மற்றும் உரிய உள்ளூராட்சி மன்றத்தின் தேவையான அனுமதிகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஒரு விண்ணப்பதாரர் அனைத்து தொழில்நுட்ப, நடைமுறைகள் மற்றும் வர்த்தக தேவைப்பாடுகள் மற்றும் வழங்கப்பட்ட சகல நிபந்தனைகளுக்கும் இணங்குதல் வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) பிரகாரம் விண்ணப்பதாரரின் உரிமைகள் மற்றும் கடமைகளை உறுதிப்படுத்தல் வேண்டும்.

### 3.2 நீர் வழங்குநர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள்

நீர் வழங்கல் இணைப்புக்கான விண்ணப்பத்தைப் பெற்றவுடன் நீர் வழங்குநர்களால் பின்வருவரும் விடயங்கள் வழங்கப்படும்:

- பூர்வாங்க ஆலோசனை
- அனுமதிக் கடிதம் (நிபந்தனைகளுடன் அல்லது இன்றி) அல்லது
- நிராகரிப்புக் கடிதம்.

நீர் வழங்குநர்கள் ஒரு புதிய நீர் இணைப்பை வழங்கவோ அல்லது ஏற்கனவே உள்ள இணைப்பை மேம்படுத்தவோ அல்லது வர்த்தக ரீதியாக /தொழில்நுட்ப ரீதியாகவோ அல்லது அவ்வாறு செய்வது சாத்தியமானதாக இல்லாதவிடத்து அதன் உட்கட்டமைப்பில் அதிகரித்த சுமையை ஏற்கவோ கடமைப்பட்டிருக்க மாட்டார்கள். நீர் வழங்குநர்கள், எந்த மதிப்பீடும் பெறப்படாத அபிவிருத்தி செயற்பாடு குறித்து அறியும் சந்தர்ப்பத்தில் நீர் இணைப்பு வழிகாட்டல்களின் பிரகாரம் அல்லது வேறு ஏதேனும் வழிகாட்டல்கள், தரநிலை அல்லது சட்டம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குல் அவற்றைப் பூரணப்படுத்த வேண்டும் என்ற எழுத்து மூல அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

அனைத்து நீர் வழங்குநர்களும் இலங்கையில் உள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் படி ஒவ்வொரு நபரும் பொருட்களை வழங்குவதற்கான அல்லது சேவைகளை வழங்குவதற்கான ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் அத்தகைய பொருட்களை வழங்குவதற்கான வர்த்தக நடவடிக்கையின் போது அல்லது அத்தகைய சேவைகளை ஒரு நுகர்வோருக்கு வழங்குவதற்கு உட்கிடையான உத்தரவாதம் காணப்படுகின்றது.

(அ) அத்தகைய சேவைகள் உரிய கவனிப்புடன் மற்றும் திறமையுடன் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) அத்தகைய சேவைகளின் போது வழங்கப்படும் எந்தவொரு பொருளும் அவை வழங்கப்படும் நோக்கத்திற்காக மிகவும் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

(இ) வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் சட்டத்தின் பிரிவு 12 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகள் மற்றும் விவரக்குறிப்புகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும் மற்றும்

(ஈ) வழங்கப்பட்ட பொருட்கள் அவை வழங்கப்படும் நோக்கத்திற்காக நியாயமான முறையில் பொருந்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

### 3.3 பிணக்குகள்

விண்ணப்பதாரருக்கும் நீர் வழங்குநர்களுக்கும் இடையே நீர் இணைப்பு விண்ணப்பம் தொடர்பில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின் அவற்றை தீர்த்துக்கொள்வதற்கு NWSDB வாடிக்கையாளர்கள் மற்றும் சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் சமூக அடிப்படையிலான கருத்திட்டங்களின் வாடிக்கையாளர்கள் (CBO) வாடிக்கையாளர்கள் நீர் வழங்கல் விடயத்திற்குப் பொறுப்பா அமைச்சுக்கும் உள்ளூர் அதிகார சபையின் வாடிக்கையாளர்கள் ஏற்புடைய மாகாண சபைகளுக்கும் எழுத்து மூலம் அல்லது இணையத்தள உள்நுழைவு வசதிகள் மூலம் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும்.

பிரச்சினைகளை உள்ளக ரீதியில் தீர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் இரு தரப்பினராலும் தீர்வுக்காக முன்மொழியப்பட்ட நீர் இணைப்பு தொழில்முறை ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்கு (நிறுவப்பட்ட பின்னர்) விடயத்தை முன்னளிப்புச் செய்ய முடியும்.

### 4. தொழில்நுட்ப தேவைகள்

நீர் வழங்குநர்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் பின்வரும் தொழில்நுட்ப ஆவணங்களை வழங்குதல் வேண்டும், அவற்றுக்கு நீர் இணைப்புக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி கட்டாயமாக இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

உத்தேச ஆவணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை இணைய வழியிலும் விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

4.1 தொழில்நுட்ப ஆவணங்கள்

1. பல்வேறுபட்ட நீர் வழங்குநர்களின் நீர் வழங்கல் இணைப்பு வழிகாட்டல்கள்.

2. அபிவிருத்தியாளர்கள், நிர்மாணிப்பாளர்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களால் கோரப்படும் நீர் தேவை மற்றும் சேமிப்பு வழிகாட்டல் உள்ளிட்ட நீர் வழங்கல் உட்கட்டமைப்பைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்துவதற்குத் தேவைப்படும் தொழில்நுட்ப வழிகாட்டல்கள் .

3. நீர் சேவைகளுக்கான தேசிய நீர் குழாய் பொருத்தும் வழிகாட்டல்கள்.

4. நியம நீர் வழங்கல் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் கையேடு
நுகர்வோரால் நீர் வழங்கல் நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்காக இலங்கை தரக் கட்டளை நிறுவனத்தின் SLS அங்கீகாரம்பெற்ற தரநிலைகளுடன் கூடிய பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பட்டியல். SLS தர நிலையில் பொருட்கள் இல்லாதவிடத்து SLSI தரங்களைப் பயன்படுத்தவும்.

5. நியம வடிவமைப்பு வரைபடங்கள்
உட்கட்டமைப்பில் பயன்படுத்துவதற்காக நியம வடிவமைப்பு வரைபடங்கள் மற்றும் விண்ணப்பதாரர்களுக்கு நீர் வழங்குநர்களிடமிருந்து எளிதாகக் கிடைக்கும் தரநியமங்கள்.

*6. நீர் வழங்குநர்கள் - நீர் அளவீட்டுக் குறியீடு*

*ஒரு வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் நீரின் அளவை அளவிடும் நோக்கத்திற்காக நீர் விநியோகம் செய்யப்படும் நிலத்தில் அல்லது வேறு ஏதேனும் இடத்திலும் ஒரு மானியை நீர் வழங்குநர்கள் நிறுவுதல் வேண்டும். மேலும், நீர் வழங்குநர்களுக்குச் சொந்தமான மானிகளை நிறுவுதல், சோதனை செய்தல், சரிபார்த்தல் மற்றும் மாற்றுதல் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் நீர் அளவீட்டுக் குறியீட்டின் மூலம் மேற்கொள்ளப்படும். இந்தக் குறியீட்டுடன் அதன் பயன்பாடு மற்றும் அது தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட ஒரு காவத்தக்க மானி வழங்கப்படும். நீர் அளவீட்டுக் குறியீடு குடிநீரை அளவிடுவது தொடர்பாக விண்ணப்பதாரர் மற்றும் நீர் வழங்குநர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை குறிப்பிடுகின்றது.*

**5. நடவடிக்கை முறை தொடர்பான தேவைகள்**

*இந்த நீர் இணைப்பு வழிகாட்டல்களின் கீழ், நீர் வழங்குநர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் மூலம் பயன்படுத்துவதற்காக சில ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.*

*5.1 நீர் வழங்கல் இணைப்புகளுக்கான அறிவிப்பு, மதிப்பீடு, அனுமதி ஆகியவற்றுக்கான பொதுவான நடைமுறைத் தேவைகள்*

*இந்த பொதுவான நடைமுறைத் தேவைகள், இணைப்பு வழிகாட்டல்களில் விவரிக்கப்பட்டுள்ள படி விண்ணப்பதாரர்கள் தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஏனைய குறிப்பிட்ட நடைமுறை ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் மூலம் அதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.*

*5.1.1 இணைப்பை பெறுவதற்கான நோக்கத்தை வெளிப்படுத்தல்*

*ஒரு விண்ணப்பதாரர் தனது தேவைக்காக நீர் விநியோக இணைப்பைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பட்சத்தில் தேவையான அனைத்து தகவல்களையும் வழங்குவதன் மூலம் நீர் வழங்குநர்களைத் தொடர்பு கொள்ளல் வேண்டும். இது நீர் வழங்குநர்களுக்கு நீர் வழங்கல் இணைப்பை வழங்குவதற்கான சாத்தியக்கூறுக்கான பூர்வாங்க மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு உதவும். நீர் வழங்குநர்கள் இந்தச் செயன்முறைக்குள் முரண்பாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்காக தேவையான தொழில்நுட்ப தரவுத் தளங்களை பௌதீக ரீதியிலோ அல்லது டிஜிட்டல் முறையிலோ பயன்படுத்த முடியும்.மேலும் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு அமைய தரவுத் தகவல்ளைப் பேணவும் முடியும்.*

*5.1.2 மதிப்பீடு*

*நீர் வழங்குநர்கள் உத்தேச நீர் இணைப்பு விண்ணப்பங்களுக்கான நடைமுறை, தொழில்நுட்ப மற்றும் நிதித் தேவைகளை மதிப்பீடு செய்து முறையான பதிலை வழங்குவர். இது ஒரு அபிவிருத்தி நடவடிக்கையாக இருக்குமிடத்து மேலும் விரிவான மதிப்பீடுகள் அவசியம்.*

*5.1.3 நீர் வழங்குநர்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கான ஒரு அலகு*

*நீர் வழங்குநர்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளைப் மேற்கொள்வதற்கு ஒரு அலகு பேணப்படும். வீதி அதிகாரிகளின் அனுமதி உட்பட. நீர் இணைப்பு தொடர்பான அனைத்து முன் ஏற்பாடுகளும் இந்த அலகின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் இந்த அலகினால் நீர் விநியோக இணைப்புகளை வழங்கும் ஏனைய அலகுகளின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளப்படும். நீர் வழங்குநர்கள், வீதிகள் மற்றும் தொடர்புடைய வீதி முகவர் நிறுவனங்கள் போன்ற சேவை வழங்கும் தரப்பினர்களுடன் புதுப்பிக்கப்பட்ட பயனுள்ள தரவுத் தளத்தை பராமரிக்கும்.*

*5.1.4 பாதை சேதங்கள் மற்றும் மறுசீரமைப்பு*

*அகழிகள் தோண்டும் பணிகள் மற்றும் பாதை மறுசீரமைப்பு பணிகள் உயர் தரத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

*5.1.5 வளாகத்திற்குள் குழாய் பொருத்தும் வேலைகள்.*

*விண்ணப்பதாரர் நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை (CIDA) நிறுவனத்தினால் தகுதிவாய்ந்த குழாய் பொருத்துநர்களை அல்லது நீர் வழங்குநர்களிடம் பதிவுசெய்துள்ள குழாய் பொருத்துநர்களை ஈடுபடுத்தல் வேண்டும்*

(CIDA) வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் கிடைக்கும் தன்மையைப் பொருத்து நீர் இணைப்பு வழிகாட்டல்களின் பிரகாரம் வளாகத்திற்குள் குழாய் பொருத்தும் பணிகளை மேற்கொள்ளல் வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு 500 $m^2$ க்கு மேல் இருப்பின் பட்டய பொறியியலாளரின் சான்றிதழ் அவசியம். விண்ணப்பதாரர்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு ஏற்ப நீர் வழங்குநர்களிடம் திட்ட வகைகள் காணப்படுகின்றன .

5.1.6 நிர்மாணப் பணியை நிறைவுசெய்தல் மற்றும் அனுமதி பெறுதல்

அனைத்து அமைக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் வகைத் திட்டங்களின் பிரகாரம் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர், விண்ணப்பதாரர் CIDA நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிவாய்ந்த குழாய் பொருத்துனரிடமிருந்து இணக்கத்திற்கான சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் (CIDA) நிறுவனத்தின் வெளியீட்டில் அல்லது நீர் வழங்குநர்களிடம் பதிவுசெய்தவர்களின் கிடைப்புத் தன்மைக்கு அமைய)

5.1.7 தொகுதியுடன் நீர் இணைப்பை தொடர்புபடுத்தல்

விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் அனைத்து தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நீர் வழங்குநர்கள் 3 நாட்களுக்குள் தொகுதியுடன் நீர் இணைப்பை ஏற்படுத்தல் வேண்டும். இந்த இணைப்பு ஒப்படைப்பின் போது, இணைப்பு வழிகாட்டல்கள் மற்றும் விண்ணப்பதாரரின் தேவையின் பிரகாரம் இணைப்பு வழங்கப்பட்டதாக விண்ணப்பதாரரின் ஒப்புதல் பெறப்படல் வேண்டும். நீர் வழங்குநர்கள் ஒட்டுமொத்த செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை காண்பிப்பதற்கு தரவுச் செயலாக்கம் மற்றும் முகாமைத்துவ அமைப்பை நிறுவுதல் வேண்டும்.

5.1.8 நீர் சேகரிப்பு ஏற்பாடுகள்

வாடிக்கையாளரின் வளாகத்தில் தேவையான அளவு நீர் சேமிப்பு வசதிகள் இருப்பது பரிந்துரைக்கப்படுகிறது.

5.1.9 மழை நீர் சேகரிப்பு ஏற்பாடுகள்

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (UDA) விதிமுறைகளின்படி மழைநீரை சேகரிப்பதற்கான ஏற்பாடுகள் அவர்களின் வளாகத்தில் /அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் மூலம் கட்டிடத் திட்டங்களுக்கு அனுமதி அளிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் திருப்தியடைதல் வேண்டும். விண்ணப்பதாரர் நீர் இணைப்பைக் கோரும்போது நீர் வழங்குநர் அவர்களுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும் மற்றும் அதற்கேற்ப மதிப்பீடுகளை தயாரித்தல் வேண்டும்.

5.1.10 மானிக்கு அப்பால் நீர் வழங்குநர்களின் பரிசோதனை

குடிநீரின் தரம் மற்றும் நியமங்களை உறுதி செய்வதற்காக, வாடிக்கையாளர்களின் வேண்டுதலுக்கு அமைய மானிக்கு அப்பால் நீர் வழங்குநர்களால் எழுமாற்று பரிசோதனை அட்டவணைகளை வைத்திருப்பது அவசியமாகும். நீர் வழங்குநர்கள் பாலின சமநிலை அடிப்படையில் குழுக்களை (கிடைப்பதற்கு உட்பட்டு) பரிசோதனைக்கு ஏற்பாடு செய்ய முடியும். நீர் வழங்குநர்களின் பரிசோதனை செலவை வாடிக்கையாளர்கள் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அத்தோடு வாடிக்கையாளர்கள் சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் தரநியமங்களின் பிரகாரம் வளாகத்திற்குள் நீர் மாசுபடுவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான பழுதுபார்ப்புகளைச் செய்தல் வேண்டும்.

5.1.11 நீரை சட்டவிரோதமாக பயன்படுத்துதல்

அனைத்து நீர் வழங்குநர்களும் நுகர்வோர் சட்டவிரோதமான முறையில் நீரைப் பயன்படுத்துவதை தடுப்பதற்குத் தேவையான அபராத சூத்திரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் இந்த விடயம் தொடர்பில் நீர் இணைப்பை வழங்கும் போது மிகத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். அத்தோடு, அந்த விடயம் தொடர்பில் பல்வேறுபட்ட தகவல்தொடர்பு வழிமுறைகள் மூலம் பரவலாகப் பரப்பப்படல் வேண்டும்.

5.1.12 முறைப்பாடுகளை கையாளும் அமைப்பு

நீர் வழங்குநர்கள் தங்களது நிறுவன அமைப்பிற்குள் திறமையான மற்றும் நம்பகமான முறைப்பாடுகளைக் கையாளும் முறையை நிறுவி வாடிக்கையாளர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.

5.1.13 விழிப்புணர்வு ஆவணங்கள்

நீர் வழங்குநர்கள் நீர் மானியைப் பொருத்திய பின்னர் நீர் விரயமாவதைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு ஆவணங்களைப் பரப்புதல் வேண்டும்.

5.2 நீர் வழங்குநர்களின் விண்ணப்பப்படிவங்கள்/ஆவணங்கள்

நீர் இணைப்பு மற்றும் சான்றிதழை இணைப்பதற்கான விண்ணப்பத்தை எளிதாக்குவதற்கு நீர் வழங்குநர்கள் எளிமையான ஆவணங்கள், அறிவுறுத்தல் வழிகாட்டல்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5.3 நீர் இணைப்புக்கான வரைவு படிவம்

நீர் இணைப்புகளுக்கான பல்வேறு வகையான குழாய் பொருத்தல் மற்றும் உபகரணங்களை நிறுவுவதற்கான திட்டங்கள் நீர் வழங்குநர்களிடம் இருத்தல் வேண்டும், இது பெண்கள் உட்பட சமூக உறுப்பினர்களுடன் குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட சமூக அடிப்படையில் நிர்வகிக்கப்படும் திட்டங்களைச் சேர்ந்த குடும்பங்களுடன் ஆலோசித்து உருவாக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு அது தொடர்பான தகவல்கள் வழங்கப்படும் அல்லது இணையதளத்திற்கான அணுகல் வழங்கப்படும். இது குறித்து போதுமான விழிப்புணர்வு செய்யப்படல் வேண்டும் அத்தோடு, 'நிர்மாண வரைவு அங்கீகரிக்கப்பட்டது' என ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

5.4 நீர் குழாய்கள் மற்றும் உபகரணங்களில் புதிதாக இணைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நீர் வழங்குநர்களால் வழங்கப்படும் கிருமி நீக்கம் செய்யும் நடைமுறை

நீர் வழங்குநர்கள் புதிதாக இணைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு தங்களது உள்ளக குழாய்கள் மற்றும் உபகரணங்களில் கிருமி நீக்கம் (குளோரின் மற்றும் பக்டீரியா தடுப்பு பரிசோதனைகள்) செய்ய அறிவுரை வழங்குதல் வேண்டும். அதற்கான செயல்முறை குழாய் பொருத்தல் வழிகாட்டலில் சேர்க்கப்படல் வேண்டும்.

**6. வர்த்தகத் தேவைப்பாடுகள்**

6.1 பொது

நீர் இணைப்பு தொடர்பான கட்டணங்கள் விலை சூத்திரம் / வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய நீர் வழங்குநர்களினால் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறே, மேற்பார்வை செய்யும் / ஒழுங்குபடுத்தும் நிறுவனத்தின் அனுமதியுடன் கட்டண மீளாய்வின் போது ஏற்புடைய பங்குதாரர்களுடன் அது தொடர்பில் ஆலோசிக்கப்படும்.

எவ்வாறாயினும், நீர் வழங்குநர்கள் நீர் வழங்கல் இணைப்பு பயன்பாடு தொடர்பான பல்வேறுபட்ட கட்டண முறைகளைக் கொண்டுள்ளனர். எனினும் அவை பின்வருவனவற்றுக்கு கட்டாயமாக வரையறுக்கப்படவில்லை.

- இணைப்புகள்
- மூலதன பங்களிப்புகள்
- பாதை மறுசீரமைப்புக் கட்டணம்
- மீளமைப்பு பணிகள் மற்றும்
- நிர்வாக சேவைகள்.

பல்வேறு நிறுவனங்களிடமிருந்து (உதாரணமாக தேவையான உள்ளூர் அதிகாரசபையின் அனுமதி, பாதை அகழ்வதற்கான அனுமதி (அனுமதி பெறுவது) உட்பட நீர் இணைப்பு தொடர்பான அனைத்து முன் ஏற்பாடுகளும் நீர் வழங்குநர்களால் செய்யப்படல் வேண்டும்.

நீர் வழங்குநர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் சாதகமான கட்டண முறைகளை ஏற்பாடு செய்தல்.

நீர் வழங்குநர்கள் தங்களது கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வெளியிடுதல் வேண்டும்.

6.2 பாதுகாப்பு பிணையம்

நீர் வழங்குநர்களால் நிர்மாணத் தளங்கள் அல்லது முன்மொழியப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அல்லது வாடிக்கையாளரின் மாற்றத்துடன் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி செயற்பாடு நிறைவடைந்த பிறகு பாதுகாப்பு பணம் வைப்பு ஒன்றை செய்வதற்கு விண்ணப்பதாரர் தேவைப்படுத்தப்படலாம். பாதுகாப்பு வைப்பு நிதிப் பத்திர வடிவில் அமைந்திருக்கும். நீர் வழங்குநர்களினால் உட்கட்டமைப்ப, சேவைகள் மற்றும் பிற பொறுப்புகளுக்கு ஏற்படும் ஆபத்தை கருத்திற்கொண்டு பாதுகாப்பின் பயன்பாடு நீர் வழங்குநர்களால் மதிப்பிடப்படும்.

**7. தேவையான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல் ஆவணங்கள்**

7.1 பொது

1. நீர் இணைப்பைப் பெறுவதற்கான தகவல் ஆவண செயன்முறை
2. நோக்கத்தை வெளிப்படுத்தும் விண்ணப்பப்படிவம் மற்றும் உள்நாட்டு / உள்நாட்டவர் அல்லாதவர்களுக்கு ½ அங்குலம் மற்றும் ½ அங்குல நீர் இணைப்பைப் பெறுதல்.
3. அபிவிருத்தி நடவடிக்கையின் பொருட்டு நீர் வழங்குநரின் தடைநீக்க அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள்
4. உள்நாட்டு /உள்நாட்டவர் அல்லாதவர்களுக்கான தனி விண்ணப்ப நடைமுறை (¾ அங்குலத்திற்கு மேல்)
5. மேலே உள்ள விண்ணப்பங்களை நிரப்புவதற்கான அறிவுறுத்தல் ஆவணங்கள்.
6. பல்வேறு வகையான நீர் இணைப்புகள் மற்றும் பாதுகாப்பு பிணையங்களுக்கான புதுப்பிக்கப்பட்ட விலை சூத்திரம்/ வழிகாட்டல்.

7.2 தொழில்நுட்ப ஆவணங்கள்

1. பல்வேறுபட்ட நீர் வழங்குநர்களின் நீர் இணைப்பு வழிகாட்டல்கள்.
2. வளாகத்திற்குள் நீர் வசதிகளை எவ்வாறு நிறுவுதல்
3. நீர் சேவைகளுக்கான தேசிய குழாய் பொருத்தல் வழிகாட்டல்கள்
4. நியம நீர் வழங்கல் பொருட்கள் மற்றும் கருவிகளின் கையேடு.
5. நீர் இணைப்புக்கான நீர் வழங்குநர்களின் நியம வரைபடங்கள்.
6. குழாய்கள் மற்றும் உபகரணங்களுக்காக புதிதாக இணைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான நீர் வழங்குநர்களின் கிருமி நீக்க செயன்முறை
7. அடுக்குமாடி மற்றும் குடியிருப்புகளுக்கான பல நீர் மானிகளைப் பயன்படுத்தல்
8. நீர் வழங்குநர்கள் - நீர் அளவீட்டுக் குறியீடு மற்றும் சூட்டிகை மானி வாசிப்பு தகவல்கள் (இருப்பின்)

7.3 நீர் இணைப்புக்கான நடைமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஆவணங்கள்

1. CIDA நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குழாய் பொருத்துநர்களின் இற்றைப்படுத்தப்பட்ட பெயர் பட்டியல்
2. நீர் வழங்குநர்கள் மற்றும் வாடிக்கையாளர் பின்னூட்டங்களை பூரணப்படுத்தும் படிவங்கள்.
3. நீர் வழங்குநர்கள் நுகர்வோருடன் மேற்கொள்ளும் ஒப்பந்தப் படிவங்கள்.
4. NWSDB வாடிக்கையாளர்களுக்கான சமூக அடிப்படையிலான திட்டங்களின் (CBO) வாடிக்கையாளர்கள் நீர் வழங்கல் அமைச்சுக்கு சமர்ப்பிக்கும் பிணக்கு அறிக்கை படிவங்கள உள்ளூர் அதிகார சபைகளின் வாடிக்கையாளர்கள் அந்தந்த மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கும் படிவங்கள். அனைத்து வாடிக்கையாளர்களும் நீர் வழங்கல் துறையில் சுயாதீன ஒழுங்குபடுத்துநரிடம் சமர்ப்பிக்கும் படிவங்கள்
5. வாடிக்கையாளர் வளாகத்தில் எழுமாற்று பரிசோதனை அறிக்கை படிவம்.

8. பொது

8.1 வரைவிலக்கணங்கள்

8.1.1 "இணைப்பு வழிகாட்டல்கள்" என்பது புதிய நீர் இணைப்புகள், இணைப்புகளை மேம்படுத்தல் மற்றும் நீர் வழங்குநர்களால் அவசியமாகப் பின்பற்றப்படும் இணைப்பு தொடர்பான நடவடிக்கைகளுக்கான நீர் வழங்கல் அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் ஆகும்.

8.1.2 "இணைப்பு" என்பது நீர் வழங்குநர்களின் உட்கட்டமைப்பிலிருந்து காணித்துண்டு, சொத்து, கட்டிடம், வளாகம் அல்லது கட்டுமானத் தளங்கள் உட்பட அபிவிருத்திச் செயற்பாட்டின் பகுதிக்கு பௌதீக ரீதியாக மேற்கொள்ளப்படும் நீர் இணைப்பைக் குறிக்கும்.

8.1.3 'நீர் வழங்குநர்கள்' என்பது, இணைக்கப்பட்ட நீர் குழாய்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு (NWSDB) உள்ளூராட்சி மன்றங்கள் (LA) சமூக அடிப்படையிலான (CBO) அமைப்புக்கள் போன்றவை) நீரை விநியோகிக்க குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் அதிகாரத்துடன் கட்டாயப்படுத்தப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நீர் வழங்குநரையும் குறிக்கும்.

8.1.4 "வாடிக்கையாளர்"என்பது எந்தவொரு வளாகத்தினதும் உரிமையாளர்,குத்தகைதாரர் அல்லது குடியிருப்பாளர், பெறுநர், அற்றோனி, முகவர், முகாமையாளர், பாதுகாவலர் அல்லது அத்தகைய உரிமையாளர், குத்தகைதாரர் அல்லது உடமையாளர், அல்லது பொறுப்பான அல்லது எந்தவொரு வளாகத்தின் கட்டுப்பாட்டையும் அல்லது உடமையையும் கொண்ட குழு உரிமையாளரின் உரிமையில் அல்லது அவரது சொந்த உரிமையில் அல்லது அவரது மனைவி அல்லது வேறு எந்த நபரின் உரிமையில் உள்ளவரைக் குறிக்கும்.

8.1.5 "உட்கட்டமைப்பு" நீர் வழங்குநர்களின் உரிமையின் கீழ் உள்ள சொத்துக்கள்.

8.1.6 "அபிவிருத்திச்செயற்பாடு"என்பது நீர் வழங்குநர்களின் தற்போதைய அல்லது எதிர்கால உட்கட்டமைப்பு அல்லது சேவைகளில் ஏதேனும் மாற்றங்கள் தேவைப்படும் முன்மொழியப்பட்ட அல்லது நடைமுறைப்படுத்தப்பட்ட பணிகளைக் குறிக்கும்.

8.1.7 "விநியோகக் குழாய்" என்பது நீர் வழங்குநர்களால் வழங்கப்படும் மற்றும் நேரடியாக விநியோகக் குழாயுடன் இணைக்கப்பட்டு நுகர்வோருக்குச் சொந்தமான நீரைக் கடத்தும் குழாயைக் குறிக்கும்.

8.1.8 "வளாகம்" என்பது குடியிருப்பு வீடு, ஹோட்டல், கடை, அலுவலகம் அல்லது வர்த்தக இடம் மற்றும் அவற்றின் உபகரணங்கள் என்பதைக் குறிக்கும்.

8.1.9 " சேவை குழாய் அல்லது பிரதான" என்பது நீர் வழங்கல் வழங்குநர்களுக்குச் சொந்தமான அவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மற்றும் நீரை விநியோகிக்கும் நோக்கத்தில் நிறுவப்பட்டுள்ள நீர் வழங்கல் அமைப்பின் எந்தவொரு குழாய் வழியும் ஆகும்

8.1.10 'விநியோகக் குழாய்' என்பது ஒரு சேவைக் குழாய் அல்லது பிரதான மற்றும் நுகர்வோருக்குச் சொந்தமான நீர் அமுத்தத்திற்கு நேரடியாக உட்பட்ட குழாய் எனப்படும்.

8.1.11 'குடிநீர்' என்பது மனிதர்களின் பாவனைக்கு உகந்த (குடிப்பதற்கு மற்றும் சமைப்பதற்கு பயன்படுதப்படும்) இலங்கை தரக் கட்டளை நிறுவனம் (ளுடுளுஐ) மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் (றுக்ஷழு) தரநியமங்களின் பிரகாரம் இலங்கை குடிநீர் வழிகாட்டல்களைப் பூர்த்தி செய்யும் குடி நீராகப் பயன்படுத்தும் நீரைக் குறிக்கும்.

8.1.12 'குடிக்காத நீர்' என்பது குடிநீருக்காக அன்றி எனினும் நீரின் தரத்தைப் பொறுத்து ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் நீரைக் குறிக்கும்.

8.1.13 'கழிவு நீர்' என்பது பயன்படுத்தப்பட்டது எனப் பொருள்படும். எற்கனவே பயன்படுத்திய நீர் குளியல், மற்றும் சலவை இயந்திரங்கள்) மற்றும் உப்பங்கழி (கழிப்பறைகளில் இருந்து வெளியேற்றப்படும் நீரைக் குறிக்கும்.

8.1.14 'உள்ளூர் தேவைகளுக்கான நீர்' என்பது நுகர்வோரின் நியாயமான குடிநீர், கழுவுதல், சுத்தம் செய்தல், சமைத்தல் மற்றும் சுகாதாரத் தேவைகளுக்காக வளாகத்தில் பயன்படுத்துவதற்கான நீர் வழங்கல் ஆகும்.

8.2 விளக்கம் /வரைவிலக்கணங்கள்

8.2.1 அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் நபர்களால் குழாய் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்

இந்த விதிகளின் நோக்கத்திற்காக, நீர் வழங்கல் அமைப்புகள் மற்றும் நீர் குழாய் பொருத்தும் பணிகளை எந்தவொரு வளாகத்திற்குள்ளும் அல்லது வெளியேயும் CIDA நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அல்லது நீர் வழங்கல் நிறுவனங்களில் பதிவுசெய்துள்ள குழாய் பொருத்துநர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் இன்றி அத்தகைய வேலையை எந்த ஒரு ஆளும் அல்லது குழுவும் செய்தல் ஆகாது. இந்த விதி ஏற்கனவே உள்ள அனைத்து பொருத்துதல்கள், பழுதுபார்ப்புகள் மற்றும் அனைத்து புதிய வேலைகளுக்கும் ஏற்புடையது. (இது போதுமான எண்ணிக்கையில் பதிவு செய்யப்பட்ட குழாய் பொருத்துநர்கள் இருக்கும் போது மாத்திரமே பயன்படுத்தப்படும்)

8.2.2 வழங்கல் குழாயில் நிறுத்தல் வால்வு.

வளாகத்தின் உள்ளே ஒவ்வொரு விநியோகக் குழாயிலும் நிறுத்தல் வால்வு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அதன் அளவு மற்றும் வகை இந்த வழிகாட்டல்கள் மூலம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். அத்தோடு, அத்தகைய நிறுத்தல் வால்வு தரையின் மேற்பரப்பிற்கு கீழே இருப்பின் உரிய முறையில் பாதுகாக்கப்படல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட வகை மற்றும் அளவுடைய சீமேந்து கொன்கிரீட் சட்டகம் மற்றும் சரியான காப்பு பொருத்தப்படல் வேண்டும்.

8.2.3 மானியின் பதிவு சரியானது என ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

(1) நீர் வழங்குநர்களின் சொத்தாக இருக்கும் மானியின் மூலம் பயன்படுத்தப்படும் அனைத்து நீரின் நுகர்வும் அளவிடப்படும். மேலும் நீர் வழங்குநர்களின் மானிப் பொறிமுறையில் சில குறைபாடுகள் இருப்பதாக நிரூபிக்கப்படாத வரை நுகர்வோர் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையை சரியானதாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

(2) எந்தவொரு காரணத்திற்காகவும் ஒரு மானி நிறுத்தப்படுமிடத்து அல்லது உள்வரும் நீரின் அளவை அது பதிவு செய்யத் தவறும் சந்தர்ப்பத்தில் நுகர்வோர் அத்தகைய காலப்பகுதியில் மூன்று மாதங்களுக்கு விஞ்சாமல் மானி செயலிழப்பினால் வழங்கப்பட்ட நீருக்கு நியாயமான தொகையை செலுத்துதல் வேண்டும். அத்தகைய நுகர்வோர் ஒருவரின் நுகர்வின் அளவு மற்றும் கால அளவுகளுடன் ஒப்பிடுவதன் மூலம் அந்தத் தொகை கண்டறியப்படல் வேண்டும்.

8.2.4 நீர் விற்பனை

நீர் வழங்குநர்களின் அனுமதி இன்றி எந்தவொரு நுகர்வோரும் மற்ற நபருக்கு நீரை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார். நீர் வழங்குநர்கள் பொருத்தமானதாகக் கருதும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் அத்தகைய அனுமதியை வழங்க முடியும்.

8.2.5 மானியில் தலையீடு செய்தல்

நீர் வழங்குநர்களின் கீழ் பணியாற்றும் ஒருவரைத் தவிர எந்தச் சூழ்நிலையிலும் எந்த மானியையும் அகற்றவோ அல்லது அதில் தலையிடவோ கூடாது.

8.2.6 நிறுத்தம் அல்லது வழங்கல் பற்றிய அறிவிப்பு

(1) நீர் வழங்குநர்களால் நீர் வழங்கப்படும் வீடு அல்லது வளாகத்தின் உரிமையாளர், அல்லது நீருக்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கு பொறுப்பான பிற நபர், நீரைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்கான தனது எண்ணம் அல்லது

நோக்கத்தை எழுத்து மூலம் நீர் வழங்குநர்களுக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய வீடு அல்லது வளாகத்தை விட்டுச் செல்லும் உடமையாளரின் தரப்பில், அத்தகைய நிறுத்தம் அல்லது அவ்வாறான வெறிதாக்கத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் குறித்த நபர் அத்தகைய அறிவிப்பை வழங்கத் தவறினால், மானியில் பதிவு செய்யப்பட்ட அனைத்து நீருக்கும் அவர் பணம் செலுத்துதல் வேண்டும். நீர் நிறுத்தப்பட்ட அல்லது வீடு அல்லது வளாகம் வெறிதாக்கப்பட்ட நாள் என்பவற்றில் எது பிந்தைய திகதியாக அமையுமோ அந்த திகதியிலிருந்து நிறுத்தம் கணக்கிடப்படும்.

(2) இந்த விதியின் பந்தி (1) இன் பிரகாரம் தேவைப்படும் அறிவிப்பு, நீர்க் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் பொறுப்பான நபரால் அல்லது அவர் சார்பாக எழுத்து மூலம் கையொப்பமிட்டு நீர் வழங்குநரின் அலுவலகத்திற்கு கடிதத்தை பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டாலே அன்றி அது எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

8.2.7 கட்டிடம் கட்டுநர்களுக்கு மற்றும் கட்டுமானத் தளங்களுக்கு நீர் வழங்கல்

புதிய கட்டிடங்கள் அல்லது ஏற்கனவே உள்ள கட்டிடங்கள் அல்லது அதன் ஒரு பகுதியை மாற்றியமைத்தல் அல்லது விரிவாக்கம் செய்யும் நோக்கத்திற்காக, கட்டிடம் கட்டுநர்கள் மற்றும் கட்டுமானத் தளங்களுக்கு வேறு ஆதாரங்கள் இல்லை எனில் நீரை வழங்க முடியும்.

8.2.8 பரிசோதிப்புக்கள்

குழாய்கள், மானிகள், பொருத்தல்கள் வேலைகள் மற்றும் நீர் விநியோகத்திற்கான உபகரணங்களை பரிசோதிப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் நீர் வழங்குநர்களால் நியமிக்கப்பட்ட ஆள், நீர் வழங்குநரின் சீருடையை அணிந்து ஒரு பொறுப்பாளரால் கையொப்பமிடப்பட்ட அதிகாரத்துடனான கடிதத்துடன் சமூகமளித்தல் வேண்டும். பரிசோதிக்கப்படும் வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் அவ்வாறான அதிகாரபூர்வமான கடிதம் வேண்டப்படும் போது அது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

8.2.9 நீர் விரயம்

நுகர்வோர் அனைத்து குழாய்கள், வால்வுகள், அலசும் தொட்டிகள் மற்றும் வளாகத்திற்குள் காணப்படும் அனைத்து வகை பொருத்துதல்களிலும் சிறந்த ஒழுங்கையும் நிலையையும் பேணுதல் வேண்டும். அத்தோடு, அனைத்து கழிவுகளையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நீர் வழங்குநர்களால் நியமிக்கப்படும் பரிசோதகர்கள் கழிவுகளை பரிசோதிப்பதற்காக எல்லா நேரங்களிலும் வளாகத்தை அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருப்பர். அவ்வாறே, நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் ஏதேனும் குறைபாட்டை சரிசெய்வதற்கு நுகர்வோருக்கு அறிவிப்பை வழங்குவதற்கான அதிகாரமும் அவர்களுக்கு உண்டு. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் நுகர்வோர் அத்தகைய குறைபாட்டை நிவர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் நீர் வழங்குநர்கள் உள்ளே நுழைந்து விநியோகத்தைத் துண்டிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளனர்.

8.2.10 பாதை மறுசீரமைப்புக் கட்டணம்

அகழி மற்றும் சேவைக் குழாய் அல்லது பிரதான குழாய் சேதமடைவதால் ஏற்படும் பாதை மறுசீரமைப்புக்கான கட்டணம், நீர் வழங்குநர்கள் மூலம் அறிவிக்கப்படும் விகிதத்தில் வாடிக்கையாளரால் பொறுப்பேற்கப்படல் வேண்டும். எனவே மறுசீரமைப்பு தேவைப்படுகின்றது.

8.2.11 மழைநீர் சேகரிப்பு

மழைநீர் என்பது ஒரு உலகளாவிய வளமாகும், இது கூரைகள் மற்றும் நிலத்தடி நீர்ப்பிடிப்புகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்றது. பாதுகாப்பாக சேமிக்கப்படுகின்றது மற்றும்/அல்லது ஊடுருவி, அதன் இறுதிப் பயன்பாடாக நிலத்துடன் கலக்கின்றது. ருனுயு விதிமுறைகளின் கீழ் 500 $m^2$ க்கும் அதிகமான கூரை பரப்பளவைக் கொண்ட மாநகர சபைகள் மற்றும் நகர சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள புதிய கட்டிடங்களில் உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மழைநீர் சேகரிப்பு கட்டாயமாகும்.

**இணைப்பு - A நீர் இணைப்பைப் பெறுவதற்கான செயன்முறை**

| *செயன்முறையின் படிமுறைகள்* | *விண்ணப்பதாரர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள் / பொறுப்புகள்* | *நீர் வழங்கு நர்களின் சேவைகள்* |
|---|---|---|
| *படி முறை 1*<br>*இணைப்பை பெறுவதற்கான நோக்கத்தை வெளிப்படுத்தல்* | *நீர் இணைப்பை பெறுவதற்கு சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம்* | |
| *படிமுறை 2*<br>*மதிப்பீடு* | | *நீர் வழங்கல் இணைப்பின் பொருத்தத்தை சரிபார்த்து அது சாத்தியமில்லை எனில் விண்ணப்பதாரருக்கு அது குறித்து அறிவிக்கப்படும்* |
| *படிமுறை 3*<br>*நீர் இணைப்புக் கட்டணங்களை மதி-ப்பீடு செய்தல்* | *மதிப்பிடப்பட்ட நீர் இணைப்புக் கட்டணங்களைச் செலுத்தல்* | *நீர் இணைப்பு சாத்தியமானதாக இருப்பின் பாதை மறுசீரமைப்பு கட்டணங்கள் உட்பட மதிப்பீட்டை வழங்குதல்* |
| *படிமுறை 4*<br>*வளாகத்திற்குள் குழாய் வேலைகள்* | *நீர் குழாய் பொருத்தும் சான்றிதழை ஏற்பாடு செய்தல்*<br>*கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு நீர் இணைப்பு பெறுவதற்கு குழாய் பொருத்-தல் சான்றிதழ் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்* | *தேவையான சான்றிதழை சரிபார்த்தல்* |
| *படிமுறை 5*<br>*தொகுதியுடன் புதிய இணைப்பை நிறைவு செய்தல்* | *வாடிக்கையாளர் ஊட்டத்தை நிரப்பி சான்றளிக்க வேண்டும்* | *நிறைவு அறிக்கையை தயாரித்தல் வேண்டும். மானி இட ஒதுக்கீட்டை ஏற்க மானி வாசிப்பாளர்* |
| *படிமுறை 6*<br>*கிருமி நீக்க செயன் முறை* | *உள்ளக குழாய்கள் மற்றும் உபகரணங்களின் கிருமி நீக்கம், குழாய் வழிகாட்டலின் பிரக-ாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்* | *வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்* |

## நோக்கத்தை வெளிப்படுத்தி நீர் இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

| | |
|---|---|
| நீர் சேவை வழங்குநர் : | பதவிலக்கம் : |
| நீர் சேவை வழங்கும் நிறுவனம் : | |

அ. விண்ணப்பதாரர் மற்றும் இருப்பிட விபரங்கள்

01. முழுப் பெயர் : சங். /திரு./திருமதி./செல்வி

02. முதலெழுத்துக்களுடன் பெயர் :

03. இடத்தின் முகவரி :

04. தேசிய அடையாள அட்டை இல /சாரதி அனுமதிப்பத்திர இல. /கடவுச்சீட்டு இல:

05. மின்னஞ்சல்:

06. தொலைபேசி இலக்கம்: குடியிருப்பு:

கையடக்க

07. மாவட்டம் :

08. பிரதேச செயலகப் பிரிவு :

09. கிராம அலுவலர் பிரிவு :

கி. அ. இல. :

10. உள்ளூர் அதிகாரசபை வரிப்பண இலக்கம் :

11. விண்ணப்பித்த புதிய இணைப்பின் வகை

வீட்டு

வர்த்தக

கைத்தொழில்துறை

ஏனையவை

நாளாந்த உத்தேச நீர் நுகர்வு (லீட்டர்)

12. நீர் இணைப்பு தற்காலிகமாக தேவைப்படும் திகதி :

13. விண்ணப்பதாரர் நீர் குழாய்களை பதிப்பதற்கு அகழி தோண்ட வேண்டுமா ?

ஆம் ☐

இல்லை ☐

(நீர் சேவை வழங்குநரின் தொடர்புடைய அலுவலகத்திலிருந்து அகழ்வுக்கான விவரக்குறிப்புகளைப் பெற்றுக்கொள்ளவும்)

14. இருப்பிட விபரங்கள்

நீர் இணைப்பு தேவைப்படும் இடத்தை எளிதாகக் கண்டறிய தேவையான முழுமையான விபரங்களுடன் தளத்திற்கான பாதையை குறித்துக் காட்டவும். (தேவை ஏற்படுமிடத்து வேறொரு வரைபடத்தை இணைக்கவும். ஜி.பி.எஸ் (GPS) அளவீடுகளை பதிவு செய்ய முடியுமெனின் அது எதிர்காலத்தில் எளிதாக இருக்கும்.

| ஜிபிஎஸ் (GPS) ஒருங்கிணைப்புகளை பதிவு செய்வதற்கு | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அகலாங்கு (N) | | | | | | | | | | நெட்டாங்கு (E) | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

15. விண்ணப்பதாரர் வேறொரு இடத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பின் அதன் முகவரி:

**ஆ. முன்னைய நீர் இணைப்புக்கள் பற்றிய விபரங்கள்**

16. இந்த இடம்/வளாகம் அல்லது வளாகத்தின் உட்பிரிவுக்கு இதற்கு முன்னர் நீர் இணைப்பு பெறப்பட்டுள்ளதா?

ஆம் ☐ இல்லை ☐

17. ஆம் எனில் கணக்கு இலக்கம்: ☐

18. முன்னர் இருந்து நீர் இணைப்பு

(தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை - உள்ளூர் அதிகார சபை /சமூக அடிப்படையிலான CBO கருத்திட்டம்)

தே.நீ.வ.வ.சபை உள்ளூர் அதிகாரசபை

CBO கருத்திட்டம்

19. புதிய நீர் இணைப்புக்கு விண்ணப்பிப்பதற்கான காரணம்

---

**இ. குடும்ப விபரங்கள்**

20. வீட்டில் வசிக்கும் நபர்களின் எண்ணிக்கை

21. குடும்ப விபரங்கள்

ஒற்றை கட்டிடம்
இரட்டை மாடிக் கட்டிடம்
பல மாடிக் கட்டிடம்

22. வர்த்தக நோக்கத்திற்கான விண்ணப்பம் எனில்,

விடுதி அறைகள் மருத்துவ நிலையம் /மருந்தகம்
பகுதிநேர வகுப்பு தனியார் மருத்துவமனைகள்
கடை

23. கைத்தொழில் நோக்கங்களுக்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமிடத்து கீழே தகவல்களைத் தருக

**ஈ. விண்ணப்பதாரரியின் பிரகடனம்**

மேலே என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் சரியானவை என்றும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**உ. நிர்மாணம் /குழாய் பொருத்தல் சான்றிதழ்:**

தகுதிவாய்ந்த குழாய் பொருத்துனர் மூலம் வழங்கப்படும் சான்றிதழ்

(CIDA வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட)

1. குழாய் பொருத்தல் மற்றும் நிர்மாணிப்புக்காக பயன்படுத்தப்படும் திட்ட வகைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 5 | | 9 | |
| 2 | | 6 | | 10 | |
| 3 | | 7 | | 11 | |
| 4 | | 8 | | 12 | |

2. பயன்படுத்தப்படும் பொருத்துதல்கள் மற்றும் உபகரணங்களுக்கான ஆதார ஆவணங்கள்

3. மழை நீர் சேகரிப்பு ஏற்பாடு வளாகத்தில்/அபிவிருத்தி நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படுகின்றது

ஆம் ☐ இல்லை ☐

4. பயன்படுத்திய நீரை (Grey Water) மீண்டும் பயன்படுத்தும் முறைமை இருப்பின்

ஆம் ☐ இல்லை ☐

5. கழிவுநீரை அகற்றும் வழிமுறைகள் ☐

6. நீர் சேகரிப்பு தொட்டிகள் (மேந்தலை /கழிவுநீர்தொட்டி) இருப்பின்

ஆம் ☐ இல்லை ☐

7. நீர் வழங்கும் வழங்குநரால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் நிர்மாணம், குழாய் பொருத்தல் வேலை மற்றும் நீர் இணைப்பு தொடர்பான உபகரணங்களை நிறுவுதல் என்பன தொடர்பில் நான் சான்றளிக்கிறேன் /சான்றளிக்கவில்லை மற்றும் நீர் விநியோக இணைப்பை வழங்குவதற்கு பரிந்துரைக்கின்றேன் /பரிந்துரைக்கவில்லை.

அங்கீகாரம் பெற்ற குழாய் பொருத்துநர் பெயர் ☐

அங்கீகாரம்பெற்ற உறுப்புரிமை இலக்கம் ☐

குழாய் பொருத்துநரின் கையொப்பம் ☐

திகதி :

**ஊ. பட்டய சிவில் பொறியியலாளரின் சான்றிதழ்**

(500 $m^2$ க்கும் அதிகமான மொத்த ஓட்டப் பரப்பளவைக் கொண்ட கட்டிடங்களுக்கு மாத்திரம்)

1. நீர் வழங்கும் வழங்குநரால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் நிர்மாணம், குழாய் பொருத்தல் வேலை மற்றும் நீர் இணைப்பு தொடர்பான உபகரணங்களை நிறுவுதல் என்பன தொடர்பில் நான் சான்றளிக்கிறேன்/சான்றளிக்கவில்லை மற்றும் நீர் விநியோக இணைப்பை வழங்குவதற்கு பரிந்துரைக்கின்றேன் /பரிந்துரைக்கவில்லை.

பட்டய சிவில் பொறியியலாளரின் பெயர்:-

உறுப்புரிமை இலக்கம் :-

பட்டய பொறியாளரின் கையொப்பம்

திகதி :

---

**எ. அலுவலக பயன்பாட்டுக்கு மாத்திரம்**

1. தொழில்நுட்ப ரீதியான தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் நீர் இணைப்பை வழங்கவும்

ஆம் ☐ இல்லை ☐

2. நீர்இணைப்பை வழங்குவதற்கு தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை எனில் அதை சுருக்கமாக நியாயப்படுத்தவும்?

தளப் பரிசோதகரின் பெயர் :

பரிசோதித்த திகதி :

கையொப்பம் :

திகதி :

3. சரிபார்ப்பு

சரிபார்க்கப்பட்டது :

பதவி:

கையொப்பம்:

திகதி:

4. நீர் இணைப்பை வழங்குவதற்கு சாத்தியமில்லை /மதிப்பீட்டிற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.

அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் பெயர்:-

பதவி:

கையொப்பம்:

திகதி :

---

ஏ. விதிமுறைகள் மற்றும் குறிப்புகள்

01. நீர் வழங்கல் விண்ணப்பத்தில் உள்ள விபரங்களுக்கு உட்பட்டு நீர் இணைப்பை பெற்றுக்கொள்ள எனது விருப்பத்தை தெரிவிக்கின்றேன்.

02. நீர் இணைப்புக் கட்டணத்தைச் செலுத்தி 3 மாதங்களுக்குள் நீர் இணைப்பை பெற்றுக்கொள்ள இணங்குகின்றேன்.

03. எனது நீர் இணைப்பின் மூலம் ஏனைய குடியிருப்பாளர்களின் குடி நீர்த் தேவைக்கு நீர் வழங்கப்படமாட்டாது என்பதை முழுமையாக ஒப்புக்கொள்கிறேன். அவ்வாறு வழங்கப்படுமாயின் எனது நீர் இணைப்புத் துண்டிப்புக்காக தாங்கள் விதிக்கும் நியாயமான இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்கும் உடன்படுகின்றேன்.

04. எனது செலவில் வழங்கப்பட்ட மற்றும் நிறுவப்பட்ட நீர் மானியின் செயற்பாட்டை சரிபார்க்க தங்களுக்கு அதிகாரம் உள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

05. நீர் கட்டணத்தை உரிய காலத்திற்குள் செலுத்துவதற்கு இணங்குகின்றேன். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் விதிக்கப்படும் அபராதத் தொகையைச் செலுத்துவதற்கும் இணங்குகின்றேன்.

06. ஒரு காலத்தில் வறட்சி ஏற்பட்டால் நிர்ணயிக்கப்பட்ட அளவு நீரைப் பெற்றுக்கொள்வதற்கு நான் உறுதியளிக்கின்றேன்.

07. நீர் இணைப்பை பெற்றுக்கொள்ளும் இடம் ஏதேனும் காரணத்தினால் மாற்றம் அடைந்தால் அதை எழுத்து மூலம் அறிவித்து அதற்கான சேவைக் கட்டணத்தை செலுத்துவதற்கும் உடன்படுகின்றேன்.

08. பரிமாற்றம்/விற்பனை/வாடகை/குத்தகை காரணமாக குடியிருப்புக் காணி அல்லது வீட்டின் உரிமை மாறும் போது ஆட்சியுரிமைய மாற்றுவதற்கு இணங்குகின்றேன்.

09. உள்ளக குழாய் வலையமைப்பில் பொருத்துதல்கள், பழுதுபார்ப்பு, உதிரிப் பாகங்களை நிறுவுதல் அல்லது வேறு எந்த வகையிலான வேலைகளுக்கான செலவுகளையும் நான் பொறுப்பேற்க கட்டுப்பட்டுள்ளேன்.

10. வழங்கப்பட்ட நீரின் தரத்தை பராமரிப்பதற்கான சேமிப்புத் தொட்டிகள், கண்ணாடிகள் போன்ற உபகரணங்கள் மற்றும் போத்தல்களை சுத்தம் செய்வதற்கு நான் உறுதியளிக்கின்றேன்.

11. சுத்திகரிக்கப்பட்ட நீர் விரயமாவதை குறைக்கவும் முடிந்தவரை நீரை மீண்டும் பயன்படுத்தவும் இணங்குகின்றேன்.

12. நீரின் தரம் மற்றும் உள்ளக குழாய் வேலைகளை பரிசோதிப்பதற்கும் பணிகளுக்கு உதவுவதற்கும் நான் இணங்குகின்றேன்.

## புதிய நீர் சேவை இணைப்பை பூரணப்படுத்தும் அறிக்கை

| | |
|---|---|
| நீர் சேவை வழங்குநர் : | பதிவு இலக்கம் : |
| நீர் சேவை வழங்கும் நிறுவனம் : | கோவை இலக்கம் : |
| நீர் இணைப்பு வழங்கப்பட்ட திகதி : | |

---

**அ. வாடிக்கையாளரின் விபரங்கள்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர்:

02. நீர் இணைப்பு வழங்கப்படும் வளாகத்தின் முகவரி :

03. தேசிய அடையாள அட்டை இல. /சாரதி அனுமதிப்பத்திர இல. /கடவுச்சீட்டு இல. : -

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

04. மின்னஞ்சல்:

05. நிலையான தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

கையடக்க தொலைபேசி இல.:

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

06. புதிய இணைப்பின் வகை

07. குடியிருப்பு வகை

08. அளவீடுகளுடன் மானி பொருத்தப்படும் அமைவிடத்தை தெளிவாக வரையவும்.

| ஜிபிஎஸ் (GPS) அளவீடுகளை பதிவு செய்வதற்காக | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அகலாங்கு (N) | | | | | | | | | | நெட்டாங்கு (E) | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

09. விண்ணப்பதாரர் வேறொரு இடத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பின் அதன் முகவரி:

| |
|---|
| |

**ஆ. நீர் இணைப்பு வழி மற்றும் வேலை விபரங்கள்**

10. சேவை வழி பற்றிய விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| விநியோகம் - பிரதான குழாயின் விட்டம் | | பிரதான குழாயின் மூலப் பொருள் வகை | |
| தற்போதுள்ள பொதுப் பிரதான குழாயின் விட்டம் | | பிரதான நீர் குழாய்க்கான ஆழம் | |

11. நீடிக்க வேண்டிய பொது பிரதான குழாய் பற்றிய விபரங்கள் (இருப்பின்)

| | | | |
|---|---|---|---|
| பொதுப் பிரதான குழாயின் விட்டம் | | நீளம் | |
| பிரதான நீர் குழாயின் ஆழம் | | புதிய இணைப்புக்கான தூரம் | |
| வழங்கப்பட்டுள்ள நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை | | | |

12. வழங்கப்பட்ட இணைப்புகளின் விபரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சேவை இணைப்பின் அளவு | | நீர் மானியின் அளவு | |
| மானி இலக்கம் | | மானியின் வர்த்தகப் பெயர் | |
| இலக்கங்களின் எண்ணிக்கை | | ஆரம்ப வாசிப்பு | |
| முத்திரை பொறிக்கப்பட்ட அடையாள குறியீட்டு தொடரிலக்கம் | | GPS அளவீடுகள் | |

13. கால நுகர்வு

| | | | |
|---|---|---|---|
| பெக்கோ இயந்திரம் - மணித்தியாலங்கள் | | உடைக்கும் இயந்திரம் மணித்தியாலங்கள் | |
| AsPhalt வெட்டும் இயந்திரம் - மணித்தியாலங்கள் | | வேலையை நிறைவுசெய்வதற்கான மணித்தியாலங்கள் | |

14. கடமை நிறைவேற்றும் குழுவினரின் விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| குழாய் பொருத்துநர் | | தொழிலாளர் I | |
| தொழிலாளர் II | | தொழிலாளர் III | |
| சாரதி | | பெக்கோ இயந்திர இயக்குநர் | |
| வாகன இலக்கம் | | பெக்கோ இலக்கம் | |

இ . மானியைப் பொருத்தல் மற்றும் உத்தேச கணக்கு இலக்கம்

15. மானி பொருத்தப்பட்ட இடம் வாசிப்புக்கு வசதியானது : ஆம் ☐ இல்லை ☐

16. வலது பக்க வளாகத்தின் கணக்கு இலக்கம் மற்றும் முகவரி

☐

17. இடது பக்க வளாகத்தின் கணக்கு இலக்கம் மற்றும் முகவரி

☐

18. உத்தேச கணக்கு இலக்கம் :

☐

மானி வாசிப்பாளரின் பெயர் ............................................ கையொப்பம் ................................................

---

**ஈ. விசேட குறிப்புகள்**

☐

நீர் வழங்கும் உத்தியோகத்தரின் :- பெயர் .................................................. கையொப்பம் .............................

பதவி ............................................... திகதி ....................................

---

**உ. வாடிக்கையாளர்களின் கருத்துக்கள்**

01. செலவின மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ள எடுக்கும் காலம் ☐

02. மதிப்பீட்டைப் பெற்ற பின்னர் பணம் செலுத்த எடுக்கும் காலம் ☐

03. பணம் செலுத்திய பின்னர் நீர் இணைப்பை வழங்க எடுக்கும் காலம் ☐

04. நீர் சேவை வழங்குநரால் கோரப்பட்ட ஏதேனும் மேலதிக பொருத்தல் கருவிகள். ☐

05. நீர் மானி பொருத்தப்பட்ட இடத்துடன் இணக்கம் ஆ ம் ☐ இல்லை ☐

06. நீர் மானியை பொருத்திய பின் ஏதேனும் நீர் கசிவு. ஆ ம் ☐ இல்லை ☐

07. சேதமடைந்த இடங்கள் அனைத்தும் சரி செய்யப்பட்டன. ஆ ம் ☐ இல்லை ☐

08. வீட்டு இணைப்புக்காக தோண்டப்பட்ட அகழியின் ஆழம். [ ]

09. குழாய் பொருத்தும் போது பதிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் [ ]

10. நிறுவிய பின் இணைப்பைச் சுற்றி பயன்படுத்தப்படும் பொருட்கள் [ ]

11. பாதை சேதங்கள் திருப்திகரமாக செப்பனிடப்பட்டன. ஆம் [ ] இல்லை [ ]

12. நிறுவிய பின் அகழியை செப்பனிட எடுக்கும் காலம் [ ]

13. நிறுவி பின்னர் உங்களது தொகுதி சோதிக்கப்பட்டது. ஆம் [ ] இல்லை [ ]

14. தாங்கள் சேவையை எவ்வாறு மதிப்பிடுகிறீர் சிறப்பானது [ ] நன்று [ ] சாதாரணம் [ ] பலவீனம் [ ]

(விண்ணப்பப்படிவத்தை நிறைவுசெய்க)

15. வீட்டு நீர் இணைப்பு செயல்முறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்.

[ ]

வாடிக்கையாளரின் கையொப்பம் .................................... திகதி...........................

---

## நீர் வழங்குநரின் பரிசோதனை அறிக்கை

| |
|---|
| நீர் சேவை வழங்குநர் : |
| நீர் சேவை வழங்கும் நிறுவனம் : |
| பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி : |

| |
|---|
| கணக்கிலக்கம் : |

---

**அ. வாடிக்கையாளர் விபரங்கள்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர்: [ ]

02. இடத்தின் முகவரி : [ ]

03. தேசிய அடையாள அட்டை இல. /சாரதி அனுமதிப்பத்திர இல./கடவுச்சீட்டு இல: -

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | |

04. மின்னஞ்சல்:

05. தொலைபேசி இலக்கம் : குடியிருப்பு:

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

கையடக்க தொலைபேசி

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

07. வாடிக்கையாளர் வேறொரு இடத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பின் அதன் முகவரி:

---

***ஆ. நீரின் தரம்***

08. பின்வரும் பரிசோதனைகள் வளாகத்தில் மேற்கொள்ளப்படும்

மொத்த கரைந்த உப்பு (TDS)

எஞ்சிய குளோரின் (RCL)

PH பெறுமானம்

கொந்தளிப்பு

09. சேமிப்புத் தொட்டியை சுத்தம் செய்யும் தடவைகள்

---

***இ. நீர் விரயம்***

10. அனைத்து குழாய்களையும் மூடிய பிறகு நீர் மானியை பரிசோதிக்கவும்

எந்த மாற்றமும் இல்லை ☐ மானி இயங்குகின்றது ☐

11. மானி இயங்கினால் தொகுதியில் தெரியும் கசிவுகள், அனைத்து குழாய் பொருத்தல் மற்றும் வால்வுகளை சரிபார்க்கவும் மற்றும் விபரங்களை குறிக்கவும்.

12. நிலையான குழாய் பொருத்தல்கள் நிறுவப்பட்டதா? ஆம் ☐

இல்லை ☐

13. குழாய் பொருத்தும் வேலையை மேற்கொண்டவர் யார்? ☐

தகுதியான குழாய் பொருத்துநர் ☐

மேசன் ☐

வேறு ஒருவர் ☐

---

ஈ. **பரிந்துரை**

| |
|---|
| |

உத்தியோகத்தர் 1 :- பெயர் ................................................ கையொப்பம் ...........................

பதவி ........................... திகதி ...........................

உத்தியோகத்தர் 2 :- பெயர் ........................... கையொப்பம் ...........................

பதவி ........................... திகதி ...........................

EOG 04 - 0013